(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **145**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 பெப்ரவரி 08, புதன்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ திலக் மாரபன

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ ஹேஷான் விதானகே

கௌரவ தேனுக விதானகமகே

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம் :** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ii) 2014 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவைக் கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படிக் கட்டளைகளை அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் நிர்வாக அறிக்கை'pயைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனிதசேமநலம், சமூகவலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டம் சம்பந்தமாக அளிக்கப்படவுள்ள விலக்களிப்புக்கள் தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 30 ஆம் திகதிய 2004/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையினால் திருத்தப்பட்டவாறான 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளையை சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்** : (1) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர், கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(2) கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ வடிவேல் சுரேஷ் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, " 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) பிரிவின் கீழான கட்டளைகள்" மற்றும் "1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ பிரிவின் கீழான கட்டளை" என்பவை தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "**வருடாந்த மதிப்பீடுகள் பற்றிய அறிமுகக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப் பொறுப்புக்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள மேலதிக**

**ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு", "இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழு இலஞ்சம் தொடர்பான திடீர் சோதனைகள் முற்பணக் கணக்கின் வரையறைகளில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016 (விடய இலக்கம்-01002)", "சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம்", "விஷேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை", "மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்"** மற்றும் **"ஏற்றுமதி, இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்"** தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

**3. மனுக்கள்:**

(1) மொனராகலை, வெலேவத்த, சாப்புவத்த, இல. 32 இல் வதியும் திரு. ஆர்.ஏ. சுஜீவவினது 2015.10.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன சமர்ப்பித்தார்.

(2) உரும்பிராய், உரும்பிராய் கிழக்கு, துண்டவைரவர் கோவில் அருகில், ஞானவைரவர் கோவில் வீதியில் வதியும் திரு. கே. வடிவேலுநாதனினது 2016.10.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஈ. சரவணபவன் சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

(பி.ப. 2.39 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**4. *சட்டமூலம் கொண்டுவர அனுமதி* :** "சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவையினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண பிரேரித்தார். கௌரவ சிசிற ஜயகொடி அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. *சட்டமூலம் கொண்டுவர அனுமதி* :** "களனி அசோகாராம சிலுமினி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சிசிர ஜயகொடி பிரேரித்தார். கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் புத்தசாசன அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. *சட்டமூலம் கொண்டுவர அனுமதி*:** "இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ மலித் ஜயதிலக பிரேரித்தார். கௌரவ முஜிபுர் ரஹுமான் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி :** "பொலன்னறுவை பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ மலித் ஜயதிலக பிரேரித்தார். கௌரவ முஜிபுர் ரஹ்மான் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் புத்தசாசன அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம்: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.**

"சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்குவாராக" என வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.06 மணிக்கு கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.45 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமை தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம்

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்த திருத்தமொன்று.

சட்டமூலம் செயல்வலுப்பெறும் திகதியாக உள்ள " 2016 சனவரி மாதம் 01 " ஆம் திகதியென குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அச் செயல்வலுப்பெறும் திகதியை நீக்கிவிட்டு " 2017 சனவரி 08 ஆம் திகதியாக பதிலீடு செய்யவும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்த இன்னுமொரு திருத்தம்.

" 2016 சனவரி 01 ஆம் திகதி" என்ற சொற்களை நீக்கிவிட்டு 2017 சனவரி 08 ஆம் திகதி என்ற சொற்களை பதிலீடு செய்யவும்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (பாதுகாப்புப் படையினர் வசமுள்ள கேப்பாப்பபுலவுக் காணிகள்) :** "இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 6.27 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

பாராளுமன்றம் பி.ப. 7.04 மணிக்கு, 2016 மார்ச் மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2017 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.